# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 5

January 2024

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

S U C I (Communist)

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டு

*[தோழர் லெனின் மறைந்து ஒரு நூற்றாண்டைக் கடந்துள்ளோம். இரஷ்யாவில் முதலாளித்துவத்தை எதிர்த்து, அந்த அரசு அமைப்பை பாட்டாளி வர்க்க அமைப்பால் இடமாற்றம் செய்த மாபெரும் முதல் உழைக்கும் வர்க்கப்புரட்சியை நடத்திய லெனினின் படிப்பினைகள் இன்றும் உலக மக்களுக்கும் நமக்கும் வழிகாட்டுகின்றன. எனவே அம் மாமனிதரைப்பற்றிய எமது கட்சிப் படைப்புகளை தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். அவ்வகையில், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஆற்றிய உரையின் சில முக்கிய பகுதிகளை இங்கு வழங்குகிறோம்.]*


### ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவது குறித்து லெனின்

ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவது பற்றிய லெனினின் மற்றுமொரு மதிப்புவாய்ந்த பங்களிப்பாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் இதனை லெனினிச மாடல் என்றழைத்ததுடன் அக்கோட்பாட்டை மேலும் வளர்த்தெடுத்துச் செழுமைப்படுத்தினார். இவ் விஷயத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் அவரது பிரசித்திபெற்ற, 'எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஏன் இந்தியாவின் ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி' என்ற நூலில் விரிவாக விவாதித்துள்ளார்.

ஒருபுறம், ஆர்எஸ்டிஎல்பி (ரஷியன் சோசலிஸ்ட் டெமாக்ரடிக் லேபர் பார்டி) கட்சியினுள் இருந்த நேரத்தில், அதன் தலைவர்களான பிளக்னோவ், மார்ட்டோவ் மற்றும் ஆக்செல்ராட் போன்ற தலைவர்களுடன் சில முக்கியக் கேள்விகளில் லெனின் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். அத்தகையவற்றில் ஒன்று, ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குவதற்கு மேற்கொள்ளவேண்டிய செயல்முறைப்போக்கு குறித்த அடிப்படைக் கேள்வியாகும்.

அதற்காக, ஒரு சித்தாந்தப் போராட்ட போக்கின் மூலமாக முதலில் ஒரு கருத்தொற்றுமை வளர்த்தெடுக்கப்படல் வேண்டும் என லெனின் கூறினார். தத்துவார்த்த மத்தியத்துவம் ஏற்படுத்திடும் இக்கோட்பாட்டை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் மேலும் விரித்துரைத்தார். வெறுமனே ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டோ அல்லது சில பிரகடனங்களை அறிவித்துக்கொண்டோ ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிட முடியாது என லெனின் கருதினார். முக்கியக் கடமையாக, முதலில் ஓர் சித்தாந்தப் போராட்டத்தை நடத்துவதின் மூலம் கருத்துக்களின் ஒற்றுமை எய்தப்படல் வேண்டும்.

தொடர்ச்சி 6ம் பக்கம்



ஜனவரி 21, 1924 – ஜனவரி 21, 2024

# தமிழ்நாட்டில் பெருமழை, வெள்ளம் – மக்களின் துயரமும் மத்திய, மாநில அரசாங்கங்களின் மெத்தனப் போக்கும்!

தமிழ்நாட்டில் டிசம்பர் மாதத்தில் மிக்ஜம் புயலால் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களும் அதனைத் தொடர்ந்து பெருமழையால் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய நான்கு தென்மாவட்டங்களும் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டன. ஏரிகள், குளங்கள் பராமரிப்பின்மை, சுற்றுச்சூழல் புறக்கணிப்பு, போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லாதது ஆகியவை மக்களின் துயரத்தை அதிகமாக்கிவிட்டன.

### வடமாவட்டங்களில் மக்களின் துயரம்

தலைநகர் சென்னை உள்ளிட்ட 4 வட மாவட்டங்களில் மிக்ஜம் புயலின் போது மிகக் கனமழை பெய்தது. டிசம்பர் 3, 4 இரு தினங்களில் 40 சென்டிமீட்டருக்கும் அதிகமாக மழை பெய்தது. வட மற்றும் மத்திய சென்னை பகுதிகள் பெருத்த சேதத்தை சந்தித்தன. தாழ்வான பகுதிகளில் வசித்தவர்கள் தங்களுடைய வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. அதேபோன்று, தென் சென்னை பகுதியில் ஏராளமான குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்புகளில் பல அடி உயரத்திற்கு தண்ணீர் தேங்கியதால் மக்கள் கடுமையான பாதிப்பிற்கு ஆளானார்கள். இதனால் ஆயிரக்கணக்கானோர் குடிநீர், உணவு, மின்சாரம், தொலைத்தொடர்பு, குழந்தைகளுக்கு பால் எதுவும் கிடைக்காமல் நான்கு நாட்கள் கடுமையான சிரமத்தை எதிர்கொண்டனர். தங்களது உடைமைகள் குழந்தைகளின் புத்தகங்கள் சான்றிதழ்கள் அனைத்தும் நீரில் மூழ்கின. விமானம், இரயில், பஸ்போக்குவரத்து முழுமையாக முடங்கின. இருசக்கர, ஆட்டோ மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டன. படகுகளும் மீன்பிடி வலைகளும் சேதம் அடைந்தன.

### மத்திய, மாநில அரசாங்கங்களின் செயல்பாடுகள்

சென்னையில் ரூ4,000 கோடி செலவில் மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது என்றும், நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாகவும், பெருமழை பெய்தாலும் ஒரு சொட்டு தண்ணீர்கூட தேங்காது என்று தமிழக அமைச்சர்கள் கூறி வந்த நிலையில் நகரம் வெள்ளக்காடாய் மாறியதும், மக்கள் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினர். கேள்வி எழுந்தவுடன் ரூ5166 கோடி ஒதுக்கப் பட்டதாகவும் அதில் ரூ2191 கோடி அளவுக்கான பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளன என்றும் இன்னும் முழுமை பெறவில்லை என்று அமைச்சர்களும், சென்னை மாநகராட்சி நிர்வாகமும் கூறியது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்த போதிலும் 24 மணி நேரத்தில் கிட்டத்தட்ட 43 செமீ மழை என்பது மிக அதிக கனமழை என்பதால் வெள்ளம் ஏற்பட்டு விட்டதாக செயலுக்கு தமிழக அரசாங்கம் விளக்கம் அளித்தது.

தொடர்ந்து டிசம்பர் 16 முதல் 18ஆம் தேதி வரை நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய நான்கு தென் மாவட்டங்களில் 60 செமீ முதல் 95 செமீ வரை மழை பெய்ததால் அனைத்து அணைகளும், கண்மாய்களும் நிரம்பி உடைப்பெடுத்தன. அதனால் ஏரிகளில் உள்ள நீர் கடலுக்கு சென்று விட்டன. தாமிரபரணி ஆற்றில் ஒரு லட்சம் கன அடிக்கும் மேல் தண்ணீர் ஓடியது. சுமார் 1000

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தமிழ்நாட்டில் பெருமழை, வெள்ளம் – மக்களின் துயரமும் . . .

# மக்களையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க அரசாங்கங்களை வலியுறுத்தி போராடுவதே நமது கடமையாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

கிராமங்கள் தண்ணீரில் மிதந்தன. வீடுகள் இடிந்தன, சேதம் அடைந்தன. இரயில் தண்டவாளங்கள் சேதமடைந்தன. விவசாயிகளின் வாழ்வாதாரமான நூற்றுக்கணக்கான மாடுகள், ஆயிரக்கணக்கான ஆடுகள், கோழிகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இறந்து போய்விட்டன. வியாபாரிகளின் மளிகைப் பொருட்கள் வீணாகிவிட்டன. அறுவடைக்கு தயாராக இருந்த பயிர்கள் முற்றிலும் சேதம் அடைந்தன. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ வைகுண்டத்தில் சுமார் 15 அடி தண்ணீர் சென்றுள்ளது. தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களில் பெரும்பாலான கிராமங்களில் பெரும் பேரழிவு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தின் காரணமாக தண்டவாளம் பழுதடைந்து ஸ்ரீவைகுண்டம் அருகே சென்னைக்கு கிளம்பிய திருச்செந்தூர் எக்ஸ்பிரஸ் இரயில் டிசம்பர் 17ஆம் தேதி அன்று இரவு இரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. டிசம்பர் 19ஆம் தேதி அன்று தான் மீட்புப்படையால் அம்மக்கள் மீட்கப்பட்டனர். 17, 18 இடைவெளி நேரத்தில் அருகாமையில் உள்ள கிராம மக்கள் நீர், உணவு, பால் இரயிலில் தவித்த மக்களுக்கு வழங்கினர். மழை முன்னெச்சரிக்கை இருந்தும் திருச்செந்தூர் இரயிலை இரயில்வே நிர்வாகம் இயக்கியது தவறானதாகும்.

தமிழ்நாட்டில் மாநகரங்கள், நகரங்கள் கன மழையை எதிர்கொள்வதற்கு இன்னும் தயார் செய்யப்படவில்லை என்பதை இந்த இரண்டு நிகழ்வுகளும் மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகின்றன. இந்திய வானிலை மையம் அதி கன மழை பெய்யும் என்று முன்பே கூறிவிட்டது. மக்கள் நல அரசாங்கம் என்பது உடனடியாக வானிலை மையத்துடன் கலந்தாலோசித்து பேரிடர் மற்றும் நிர்வாக அமைப்புகளை முடுக்கி விட்டு தாழ்வான பகுதிகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்களையும், உயிரினங்களையும் முடிந்த மட்டும் பொருட்களையும் இடம் பெயரச் செய்து பாதுகாப்பான முகாம்களில் வைத்திருக்க வேண்டும். மற்ற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தேவையான அடிப்படைத் தேவைகளை உறுதி செய்ய வேண்டும். இதை செயல்படுத்துவதற்கு இராணுவம், போலீஸ், நிர்வாகம் இதற்கு எல்லாவற்றிற்கும் மேலாக நமது இளைஞர் பட்டாளத்தை ஈடுபடுத்த வேண்டும். ஆனால் என்ன நடந்தது? மாநில அரசாங்கம், வானிலை ஆய்வு மையம் மழைப்பொழிவின் தாக்கத்தை அல்லது அளவை சரியான முறையில் தங்களுக்கு வழங்கவில்லை என்று வானிலை மையத்தின் மீது குற்றம் சுமத்தியது. மத்திய அரசாங்கம் இதை மறுத்தது. வானிலை ஆய்வு மையமும் தாங்கள் கொடுத்த அறிவிப்பின் உள்ளடக்கத்தை விளக்கி தனது செயல் திறனை நிரூபிக்க முயற்சித்தது. அனைத்து துறைகளும் தங்களை தவறு செய்யாத அமைப்புகளாக காட்டிக்கொள்ள முயற்சித்தன. ஆனால், இப்படிப்பட்ட சூழலில் அனைத்து அமைப்புகளும் ஒன்றாக இணைந்து பணியாற்றி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உண்மையை மறந்து அல்லது மறைத்து வருகின்றன. ஆனால், மக்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் போது மட்டும் அதை ஒடுக்குவதற்கு ஒட்டுமொத்த அரசு நிர்வாகமும், காவல்துறையும், இராணுவமும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக ஒடுக்குகின்றன. பட்ஜெட்டில் இராணுவத்திற்காக நிதி ஒதுக்குவதில் மூன்றாவது நாடாக இந்தியா உள்ளது. மிகப்பெரிய இராணுவத்தை கொண்டுள்ள நமது நாடு இப்படிப்பட்ட பேரழிவை சந்தித்துக் கொண்டிருக்கும் மக்களை காப்பாற்றுவதற்கு மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை, எடுப்பதும் இல்லை, மாநில அரசாங்கமும் இவற்றை உரிய நேரத்தில் கேட்டு பெறவில்லை என்பதே உண்மை.

### சுற்றுச்சூழல் சீரழிவு

புவி வெப்பமயமாதலால், அதீத மழை, அதீத வெப்பம், அதீத வறட்சி ஏற்படும் என்று நிபுணர்கள் கணித்து வருகின்றனர். இது போன்ற சூழலில் இவற்றை எதிர்கொள்ள அரசாங்கங்கள் தயாராக வேண்டாமா? தயாராவதற்கு பதிலாக, வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில், பல்லாயிரக்கணக்கான விளைநிலங்கள், நீர் நிலைகள், காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. வறட்சியான சூழலில் விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட் மூலமாக அடுக்குமாடி வீடுகளாக மாற்றப்பட்டு விட்டன. நீர் நிலைகளில் தனியார்கள் கொள்ளை லாபம் ஈட்ட கல்வி நிறுவனங்களை கட்டிக் கொள்வதற்கு அனுமதியும் தனது பங்கிற்கு பேருந்து நிலையங்கள், அலுவலகங்கள், நீதிமன்றங்கள்கூட அரசாங்கத்தால் கட்டப்பட்டுவிட்டன.

சென்னையில் 1893ஆம் ஆண்டு நிலவரப்படி 12.6 சதுர கிலோமீட்டர் அளவிற்கு நீர் நிலைகள் இருந்தன. ஆனால் தற்போது வெறும் 3.2 சதுர கிலோமீட்டர் அளவு மட்டுமே நீர்நிலைகள் உள்ளன. சென்னையின் பள்ளிக்கரணையில் உள்ள சதுப்பு நிலப் பகுதி 1965ஆம் ஆண்டு 5500 ஹெக்டேர் பரப்பளவில் இருந்தது. ஆனால் 2013ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வெறும் 600 ஹெக்டர் அளவாக சுருங்கிவிட்டது. இந்த நிலை சென்னை மட்டுமல்லாது பல மாவட்டங்களின் நிலை இதுதான். அதேபோல் ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப் படவில்லை. ஏரி கரைகளை உயர்த்துவதாகக் கூறி பல கோடிகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழலில் தான் பலத்த மழை பெய்யும் பொழுது மழைநீர் தேக்கி வைக்கப்பட முடியாமலும், செல்ல வழி இன்றியும் மிகப்பெரும் பாதிப்புகளை மக்கள் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, சுற்றுச்சூழலியல் நிபுணர்கள், நீர் மேலாண்மை நிபுணர்கள் அனைத்து துறையின் ஆலோசனையை கொண்டும் மற்றும் தற்போதைய மக்களின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டும் மழைக்காலங்களில் மட்டுமல்லாது வறட்சி ஏற்படக்கூடிய காலங்களிலும் சூழ்நிலை களை எதிர்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதோடு மக்களையும் இதற்கு பயிற்றுவிக்க வேண்டும்.

ஆனால் இவ்வளவு பாதிப்புகளுக்கு பிறகும் சுற்றுப்புறச் சூழலியலாளர்கள், நீர் மேலாண்மை வல்லுநர்களின் கருத்துக்களை புறந்தள்ளிவிட்டு சென்னையில் இரண்டாவது விமான நிலையம் அமைப்பதற்காக பரந்தூரில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள், குளங்கள் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளை அழித்துவிட்டு அங்கு வாழும் மக்களின் முழுமையான எதிர்ப்பையும் ஒடுக்கிவிட்டு “பசுமை” விமான நிலையம் அமைக்க தமிழக அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் மூர்க்கத்தனமாக முயற்சிக்கின்றன.

### வழங்கப்பட்ட நிவாரணம் போதுமானதா?

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சில ஊர்களில் சில பகுதி மக்களுக்கு மட்டும் ரூ6000 நிவாரணம் வழங்குவதாக மாநில அரசாங்கம் அறிவித்தது. சர்க்கரை அட்டைதாரர் களுக்கு இந்த நிவாரணமும் இல்லை என்பது வேறு விஷயம். நிதிநிலை நெருக்கடியான சூழ்நிலையிலும் தாங்கள் தாராளமாக மக்களுக்கு வழங்கி விட்டதாக கூறுவது கொடூர நகைச்சுவைக்கு ஒத்ததாகும். ஆனால் இந்த நிவாரணம் எவ்வகையிலும் போதாது என்பதால் மக்கள் கோருவது, மழை வெள்ளத்தின் தீவிரத்தை கணக்கில் கொண்டு பாரபட்சமற்ற ஒரு முழுமையான கணக்கெடுப்பை நடத்தி நிவாரணங் களை வழங்க வேண்டும் என்பதுதான் ஆகும்.

### பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்ளும் மத்திய, மாநில அரசாங்கங்கள்

நிவாரணப் பணிகளுக்கான தாங்கள் கேட்ட நிதியை மத்திய அரசாங்கம் கொடுக்க மறுக்கின்றது என்று திமுக அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது. ஆனால் திமுக அரசாங்கம் உரிய நடவடிக்கை களை எடுக்கவில்லை என்று மத்திய அமைச்சர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் மத்திய அரசாங்கம் தாங்கள் கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்து விட்டதாகவும் இதற்கு மேல் வேறொன்றும் செய்வதற்கில்லை எனக் கூறுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும், மத்திய நிதி அமைச்சரும், பிரதம மந்திரியும் அதிகமான நிதியையும், தொழில் வளர்ச்சிக்கான அதிக நிதியையும் ஒதுக்கி வருவதாக கூறுகிறது. இந்த வெள்ள பாதிப்பிலும்கூட அதை வாக்கு வங்கி அரசியலுக்கு பயன்படுத்த கட்சிகள் அனைத்தும் எத்தனிக்கின்றன.

### மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் செய்த நிவாரண பணிகள்

ஒருபுறம் அரசாங்கங்கள் இப்படி பொறுப்பற்ற முறையில் பேசிக் கொண்டிருந்தாலும் அந்தந்தப் பகுதி மக்களும் பிற பகுதிகளில் உள்ள நல்லெண்ணம் கொண்ட தன்னார்வலர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினர். உணவு வழங்குவது, இடங்களை சுத்தம் செய்வது, கிருமி நாசினியை தெளிப்பது, மருத்துவ முகாம்கள் நடத்துவது போன்ற இன்னும் பல பணிகளை செய்தனர்.

### தொலைநோக்குப் பார்வையோடு இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்

இது போன்ற பாதிப்புகள் இனி வராமல் இருப்பதற்கு பெருமழை வெள்ளத்தை எதிர்கொள்வதற்கு அரசாங்கங்கள் தயாராக வேண்டும். நீர்நிலைகளை ஆழமாக்கி பாதுகாத்தல், புவியியல் இயற்கை அமைப்பிற்கு ஏற்றார் போல் நீர்ப்பாதைகளைப் பேணி பாதுகாத்தல் போன்ற பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும். தொழில் வளர்ச்சி என்ற பெயரில் விவசாய விளை நிலங்களை பறிப்பதற்கான சட்டத்தை உடனடியாக நீக்கவும் கட்டாயமாக பறிப்பதையும் நிறுத்த வேண்டும்.

ஐஐடி சென்னை மற்றும் அண்ணா பல்கலைக்கழகமும் பெரும் வெள்ளத்தை அறிவியல்ரீதியாக எதிர்கொள்வதற்கு உதவும் என்று தமிழ்நாடு அரசாங்கம் கூறுகிறது. முன்னாள் தலைமைச் செயலாளர் திரு திருப்புகழ் தலைமையில் தமிழக அரசாங்கம் அமைத்த நிபுணர் குழு தனது இடைக்கால அறிக்கையை மே 2022ல் சமர்ப்பித்தது. பெரு வெள்ளத்தை சமாளிக்கக்கூடிய திறன் சென்னை ஆறுகளுக்கு இல்லை எனவே இது ஒரு சவாலான பணி, சில பரிந்துரைகளை துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. அதன் இறுதி அறிக்கை மே 2023ல் வழங்கப்பட்டு விட்டபோதிலும் அவ்வறிக்கை இன்னும் பொது வெளியில் வெளியிடப்படவில்லை.

எனவே, மக்களை உள்ளடக்கிய நிபுணர்களின் பரிந்துரைகளின்படி நாட்டில் உள்ள நீர்நிலை களை கரை உயர்த்தி ஆற்றுப் பாசன வழித்தடங் களை மேம்படுத்த வேண்டும். வெள்ள அபாயத்தை முன்னறிந்து மக்களைப் பாதுகாக்க நிவாரண முகாம்கள், உணவு, மருத்துவ வசதிகளுடன் கூடிய தங்குமிடங்கள் ஆகியவை அடங்கிய முன்னேற்பாடுகளை நாட்டில் எல்லா பகுதிகளிலும் தயார் நிலையில் வைக்க வேண்டும். பேரிடரை சமாளிக்க அறிவியல்பூர்வ மேலாண்மை, முழு இராணுவ சாதனங்களையும் வீரர்களையும் பயன்படுத்தும் வகையில் உருவாக்க வேண்டும். தமிழகத்தில் வெள்ளத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத் தொகையுடன் வாழ்வாதாரத்திற்கு அரசாங்கம் வேலை வழங்க வேண்டும். மக்களின் உடைமை இழப்புகளை கணக்கெடுத்து போதிய நிவாரணம் வழங்க வேண்டும். கால்நடைகளை இழந்து விளைச்சலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். பள்ளி சீருடைகள், புத்தகங்கள், சான்றிதழ்கள் இழந்த அனைத்து மாணவர்களுக்கும் அவை இலவசமாக திரும்பக் கிடைக்க வழிசெய்ய வேண்டும் ■

# தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையில் தொடர் சுயபரிசோதனை மிக அவசியம் என்பதற்கு தோழர் மணிக் முகர்ஜியின் வாழ்க்கை ஓர் சிறந்த எடுத்துக்காட்டு

## – தோழர் பிரவாஸ் கோஷ்

*[எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மூத்த பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் மணிக் முகர்ஜி அக்டோபர் 16, 2023 அன்று இயற்கை எய்தினார். அவருக்கு வீராஞ்சலி செலுத்த கொல்கத்தாவில் அக்டோபர் 26, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இங்கே வழங்கப்படுகிறது.]*

தோழர்களே, நண்பர்களே,

நாம் அனுஷ்டிக்கும் அஞ்சலிக் கூட்டங்கள் எல்லாம் வெறும் சடங்குகளல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். மலர் அஞ்சலி செலுத்துவது, இரங்கல் தீர்மானங்கள், கூட்டத்தில் ஆற்றப்படும் உரைகள் இவையாவும் வெறும் சம்பிரதாயங்களல்ல. காலஞ்சென்ற நமது தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் இவற்றைத்தவிர வழங்க நம்மிடம் எதுவுமில்லை. ஏனெனில் அவர்கள் நாம் எட்டயியலாத தொலைவிற்குச் சென்றுவிட்டனர். எனவே, இந்த இரங்கல் கூட்டத்தின் ஒரே இலக்கு, தோழர் சிப்தாஸ் கோஷின் மாணாக்கர் என்ற அடிப்படையில் மறைந்த தோழர் எவ்வாறு எந்த அளவிற்கு தனது வாழ்க்கைப் போராட்டத்தை நடத்தினார், புரட்சியை முன்னெடுப்பதில் என்ன பங்காற்றினார், அவரது வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும் பாடங்களென்ன, நாம் பெற்றுக்கொள்ள, நம்மிடம் வளர்த்துக்கொள்ள என்ன குணங்கள் அவரிடம் இருக்கின்றன என்பனவற்றை நினைவூட்டிக் கொள்ளவே ஆகும்.

நமது கட்சியில் 1974ல் முன்னணித் தோழரும் மத்தியக் கமிட்டி உறுப்பினரும், மக்களிடையே நன்கறியப்பட்ட தலைவரும், அன்று மேற்கு வங்க இடது முன்னணி அரசாங்கத்தின் தொழிலாளர் அமைச்சருமான தோழர் சுபோத் பானர்ஜி மறைந்த பொழுது, முதன் முதலில் நாம் வேதனையின் வலியை உணர்ந்தோம். அப்பொழுது இதே அரங்கில் நடைபெற்ற அவரது இரங்கல் கூட்டத்தில், மாபெரும் தலைவரும் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் உரை யாற்றினார். அவ்வுரையில், எவ்வாறு மிகுந்த வேதனையைத் தாங்கிக் கொள்வது, ஒரு புரட்சியாளர் தனது வாழ்க்கையில் அந்த வேதனையை எப்படி உணர வேண்டும் என்ற வழிகாட்டுதலை நம்மிடையே முன்வைத்தார். அதன் நோக்கம், தோழர் சிப்தாஸ் கோஷ், தானே மறைந்தாலும் அச்சூழ்நிலைக்கு நம்மைத் தயார்படுத்துவதாகும். அந்த வேதனைமிக்கத் தருணத்திலும் புரட்சியாளர்களாக நாம் உறுதியுடன் நின்று புரட்சிக்கு நமது கடமையை ஆற்ற வேண்டுமென அவர் விரும்பினார். அந்த உரையில், “இதயத்தின் உன்னத உணர்வினை புரட்சி அரசியல் கோருகிறது” என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்கியத்தை வெளிப்படுத்தினார். மேலும், “அந்த வேதனையின் வலியின் முக்கியத்துவத்தையும், அது தம்மை (நம்மை) என்ன செய்யச் சொல்கிறது என்பதையும் உணர்ந்து கொள்ளத் தவறினால், வெறும் வருத்தமும் உணர்ச்சியும் புரட்சியாளர்களுக்கு எந்த அர்த்தமும் ஆகாது” என்றும் தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். இது அவரது மிக முக்கிய பாடமாகும். மாபெரும் தலைவர் ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு, துக்கத்தை வலிமையாக மாற்றுங்கள் என்று தோழர் மாவோ கூறினார்.

பிறகு நாம் தோழர் நிகார் முகர்ஜியையும் கட்சியின் இன்னும் பல தலைவர்களையும் தோழர்களையும் இழந்தோம். கட்சியின் வங்கப் பத்திரிகையில் அடிக்கடி ஓரிரு தோழர்களின் மரணச் செய்திகளை நான் பார்க்கிறேன். அவர்களில் சிலரை நான் அறிவேன், வேறு சிலரை நான் பார்த்தது இல்லை. ஆனால் அனைவரும் தோழர் சிப்தாஸ் கோஷ் படிப்பினைகளின் அடிப்படையில் போராடிய வர்கள் என்பதை நான் அறிவேன். இவர்கள் அனைவரும் கட்சியின் ஸ்தாபக நாளான ஏப்ரல் 24 அன்றும், பல்வேறு ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் நம்முடன் இருந்தவர்களாவர். இந்த ஆகஸ்ட் 5, 2023 அன்று நடைபெற்ற சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டின் மாபெரும் கூட்டத்திற்கு வந்த சில தோழர்கள் இன்று நம்மிடையே இல்லை. இந்தப் பின்னணியில், கடந்த 8 அல்லது 10 ஆண்டுகளாக தோழர் மணிக் முகர்ஜியை சந்திக்கும் வாய்ப்பை இளைய தோழர்கள் பெறவில்லை. அவர்களுக்காக நான் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும்.

தோழர் மணிக் முகர்ஜி என்னைவிட வயதில் சற்று மூத்தவர். நானும், அவரும், மறைந்த தோழர் மொபினுல் ஹைதர் சௌத்ரியும் ஒத்த வயதுடையவர்கள். ஓரிரு வருட வயது வேறுபாடே எங்களுக்குள் இருந்தது. தோழர்கள் என்ற அடிப்படையிலும் நாங்கள் மிக நெருக்கமானவர்கள். நமது கட்சியில் தோழமை என்பது வெறும் சம்பிரதாய உறவு அல்ல. மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனை மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த உறவு, சுயநலம், பொறாமை போன்றவற்றை கடந்த ஓர் உயர்ந்த பாட்டாளிவர்க்க கலாச்சாரத்தின் அடிப்படையில் எங்களைப் பிணைக்கும் புரட்சிகர தோழமை உறவாகும். மேலும் இது நமது நாட்டில் மட்டுமே அடங்கிவிட்ட உறவு அல்ல; இந்த உறவு சர்வதேச அளவிலும் நம்மிடையே நிலவுகிறது, பல்வேறு நாடுகளிலும் போராட்டங்களை நடத்த நமக்குத் தூண்டு சக்தியாக விளங்குகிறது. ஆக, இது வெறும் தற்செயலான உறவுவல்ல.

எனக்கும் முன்பே தோழர் மணிக் முகர்ஜி தோழர் சிப்தாஸ் கோஷுடன் தொடர்புக்கு வந்துவிட்டார். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பே டாக்காவில் தோழர் சிப்தாஸ் கோஷை அவர் பார்த்துவிட்டார். ஆனால் அந்த வயதில் அவர் தோழர் சிப்தாஸ் கோஷின் பெருமையை அறிய இயலவில்லை. எனக்குத் தெரிந்தவரை, எனக்கு முன்பே அவர் கட்சியில் இணைந்துவிட்டார். நான் 1950ல் கட்சியில் சேர்ந்த போது அவர் அங்கு இருந்தார். கம்சொமோல் எனும் இளங்கம்யூனிஸ்ட் அமைப்பைக் கட்டும் பொறுப்பை தோழர் கோஷ் அவருக்குக் கொடுத்திருந்தார். மேலும், கட்சியின் மாணவர் அமைப்பான ஜனநாயக மாணவர் அமைப்பை (DSO) உருவாக்கி வளர்க்கும் தயாரிப்புக் கமிட்டியில் அவரும் நானும் இணை கன்வீனர்களாக இருந்தோம். காச நோயால் இருமுறையும் மஞ்சள் காமாலையால் ஒருமுறையும் தீவிரமாகப் பாதிக்கப்பட்ட தோழர் மணிக் முகர்ஜியால் கட்சியில் நேரடியாக பணிகளில் ஈடுபட முடியவில்லை.

1963ல் சில பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பொறியாளர்கள் கட்சியில் இணைந்தனர். அப்பொழுது அறிவுஜீவிகளைக் கொண்டு அணியை வளர்த்தெடுக்கும் பொறுப்பை சிப்தாஸ் கோஷ் மணிக் முகர்ஜிக்கு வழங்கினார். ‘பதிக்கிரித்’ என்ற அந்த அமைப்பு வெறும் கலாச்சார (இலக்கிய) அமைப்பு என்று சொல்வது பாதி உண்மையே ஆகும். அவர்களுடன் பல்வேறு அறிவாதாரத் துறையின் விஷயங்களும் கருத்தியல் விவாதங்களும்கூட நடத்தப்பட்டன. இந்த விஷயங்களை தோழர் மணிக் முகர்ஜி முன்கூட்டியே தோழர் சிப்தாஸ் கோஷுடன் விவாதித்த பிறகு அந்த அணியின் அவையில் முன்வைப்பார். அந்த அவையைச் சேர்ந்தவர்கள் தத்தமது கருத்தை முன்வைப்பார்கள். அவற்றை பிறகு மணிக் முகர்ஜி தோழர் கோஷிடம் தெரிவிப்பார். அவர் மேற்கொண்டு எப்படி என்ன விவாதிப்பது என மணிக் முகர்ஜிக்கு வழிகாட்டுவார். இவ்வாறாக கலை இலக்கியங்கள் உட்பட பல்வேறு தலைப்புகளில் கருத்துப் பரிமாற்றங்கள் நடக்கும் வகையில் அந்த அறிவுஜீவிகள் அணி வளர்ச்சி பெற்றது. ஆனால் காலப்போக்கில் வளர்ந்த ‘பதிக்கிரித்’ அமைப்பு இப்படி ஒரு ‘அறிவுஜீவி அமைப்பாக’ மட்டுமே



**தோழர் மணிக் முகர்ஜி**

உருவாகவில்லை. அந்த அமைப்பின் உறுப்பினர்கள் கட்சி செயல்பாட்டாளர்களாக, கட்சிப் பணிகளில் ஈடுபடுபவர்களாக இருந்தனர். அதில் ஒரு பிரிவினர் கட்சி ஆங்கிலப் பத்திரிகையான ‘புரொலிடேரியன் எரா’வில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதும் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இந்த அறிவுஜீவிகள் அணியை வளர்க்கும் போக்கில் தோழர் மணிக் முகர்ஜி அத்துறையில் ஆற்றலையும் அனைவரையும் மிஞ்சும் திறனையும் பெற்றார். இதனை நான் கவனித்தேன். தோழர் கோஷின் சரச்சந்திரரைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கு வங்கத்திலும் நாடு முழுமைக்கும் பரப்புவதில் தோழர் மணிக் முகர்ஜி முக்கியப் பங்காற்றினார்.

அதேபோல், முன்ஷி பிரேம்சந்த் நூற்றாண்டை அனுசரிக்கும் போது தோழர் மணிக் முகர்ஜி திரு விஷ்னு பிரபாகரைச் சந்தித்தார். மணிக் முகர்ஜியிடமிருந்து சரச்சந்திரரைப் பற்றி சரியாக அறிந்துகொண்ட திரு பிரபாகர் மிகவும் ஈர்க்கப்பட்டார். இந்த மதிப்பீட்டை முன்பே அறிந்திருந்தால், நான் சரச்சந்திரரை வேறுவிதமாக புரிந்து கொண்டிருப்பேன் என அவர் கூறினார். வானொலியில் ஆற்றிய உரையில் திரு பிரபாகர் இதைக் குறிப்பிட்டு தோழர் சிப்தாஸ் கோஷின் பெயரை சுட்டிக் காட்டினார். தோழர் மணிக் முகர்ஜியின் இந்தப் பணி போற்றுதலுக்குரியது. மேலும், தோழர் மணிக் முகர்ஜி, ‘கோல்டன் புக் ஆஃப் சரச்சந்திரர்’, ‘கோல்டன் புக் ஆஃப் வித்யாசாகர்’ ஆகிய இரு புத்தகங்களையும் தயாரித்து வெளியிட உதவினார். கட்சியின் பிற தலைவர்களும் இவ்விருவரைப் பற்றி பலமுறை உரையாற்றியுள்ளனர். ஆனால் தோழர் மணிக் முகர்ஜியின் பங்காற்றல் சிறப்பாகச் சொல்லப்பட வேண்டும்.

1975ல் நமது கட்சியின் முன்முயற்சியில் நாடுமுழுவதும் சரச்சந்திரர் நூற்றாண்டுவிழா கொண்டாடப்பட்டது. புகழ் பெற்ற வங்க இலக்கியவாதி டாக்டர் பிலாய்சந்த் முகர்ஜி மேற்கு வங்க விழாகமிட்டியின் தலைவராகவும் மணிக் முகர்ஜி செயலாளராகவும் இருந்தனர். பின்னர் அகில இந்திய சரச்சந்திரர் நூற்றாண்டு விழா கமிட்டி, திரு விஷ்னு பிரபாகர், திரு உமாகந்த் ஜோஷி மற்றும் பலருடன் உருவாக்கப்பட்டது.

1977ல் அன்று இருந்த சிபிஐ(எம்) மேற்கு வங்க அரசாங்கம், ஆரம்பக் கல்வித் திட்டத்திலிருந்து ஆங்கில மொழிப்பாடத்தையும் பாஸ் ஃபெயில் தேர்ச்சி முறையையும் நீக்கியது. இம்முடிவை எமது கட்சி தீவிரமாக எதிர்த்தது. 1978ல் பல்கலைக் கழகங்களின் சுயாட்சியை (Autonomy) குறைக்கத் துவங்கியது. இந்தப் பிரச்சினைகளை முன்வைத்து தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்த,

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தோழர் மணிக் முகர்ஜியின் அஞ்சலி கூட்டம் . . .

# முன்னணி அறிவுஜீவிகளை ஈடுபடுத்தி இயக்கங்களை நடத்துவதில் அச்சாணி பாத்திரமாகச் செயல்பட்டவர் தோழர் மணிக் முகர்ஜி

*3ம் பக்கத் தொடர்ச்சி*

*பிரசித்தி பெற்ற வங்க இலக்கியவாதி பிரமேந்திர மித்ராவை தலைவராகவும் மணிக் முகர்ஜியை பொதுச் செயலாளராகவும் கொண்ட 'கல்வியை குறைப்பதை எதிர்க்கவும் கல்வித்துறையின் சுயாட்சியை பாதுகாக்கவும் கமிட்டி' அமைக்கப் பட்டது. இந்த இயக்கத்தில் புகழ் பெற்ற கல்வியாளர்கள், பேராசிரியர்கள், சான்றோர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரை திரட்டும் பணி தோழர் மணிக் முகர்ஜிக்கு வழங்கப்பட்டது. அப்பொழுது, ஆசியாவிலேயே புகழ் பெற்ற மொழியியலாளரான டாக்டர் சுகுமார் சென், இலக்கியவாதி பிரேமானந் பிஷி, ஊடக வியலாளரும் எழுத்தாளருமான சந்தோஷ் கோஷ், யாதவ்பூர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அரவிந்த போஸ், எழுத்தாளர் மனோஜ் பாசு, தேசிய நூலகர் டாக்டர் ரவீந்திர குமார் தாஸ்குப்தா, புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளர் டாக்டர் நிஹார் ரஞ்சன் ராய், புகழ்பெற்ற கண் மருத்துவர் டாக்டர் நிஹார் முன்ஷி, பிரபல கல்வியாளர் ப்ரத்யூல் குப்தா என இன்னும் பலரை தோழர் மணிக் முகர்ஜி அணுகினார். கல்வி மற்றும் மொழிக்கான இயக்கத்தின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு விளக்கினார். இது அவ்வளவு சுலபமான காரியமல்ல. தோழர் மணிக் முகர்ஜியின் பெயர் அப்போது யாருக்குத் தெரியும்? தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையிலான கட்சி நிலைப்பாட்டை சரியாக அறிந்து அதனைப் பலர் முன்னிலையில் சரியாக முன்வைப்பது அவ்வளவு எளிதல்ல. சிபிஐ(எம்) அரசாங்கத்தின் தவறான மொழிகல்விக் கொள்கை உருவாக்கும் அபாயத்தை மேற்கூறிய நபர்களை ஏற்றுக் கொள்ள வைப்பதும் சுலபமல்ல. சிபிஐ (எம்) அரசாங்கம் அப்போது சக்தி வாய்ந்தாக இருந்தது. பல கல்வியாளர்களும் அறிவுஜீவிகளும் அவர்கள் கையிலும் இருந்தனர். நாம் நமது கருத்தை ஏற்றுக்கொள்ள வைப்பது போன்றே, அவர்களும் அக்கட்சியின் நிலைப்பாட்டுடன் இருந்தனர். ஆனால் நமது கருத்தை அவர்களுக்கு ஏற்றுக்கொள்ள வைப்பதில் தோழர் மணிக் முகர்ஜி வெற்றி கண்டார். அவர்களைவிட இளைய வயதினராக, யாரும் அறியாத நபராக இருந்த மணிக் முகர்ஜி, அவர்களை நமது கருத்தை ஏற்றுக் கொள்ள வைத்து வெற்றி கண்டு அவர்களின் அன்பையும் நேசத்தையும் நம்பிக்கையையும் பெறுவது உண்மையில் மிகுந்த சிரமமாகும். அவரது முயற்சியின் வெற்றியால் மேற்கூறிய அனைவரும் மொழிக்கான இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.*

***1978**ல் ஒரு மாநாட்டின் மூலம் அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டது. பிறகு **1979**ல் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்ட மறுப்பு போராட்டத்தை நமது கட்சி நடத்தியது. சிபிஐ (எம்) அரசாங்கத்திற்கு எதிரான முதல் போராட்ட இயக்கம் இதுதானாகும். இந்த சட்ட மறுப்பு வெகுஜன இயக்கத்தில் பலர் சிபிஐ(எம்) அரசாங்கத்தால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தனர். ஆயினும் போராட்டத்தை விடாமல் நடத்தி ஆரம்பக் கல்வித் திட்டத்தில் ஆங்கிலத்தையும் பாஸ் ஃபெயில் தேர்ச்சி முறையை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டுமென நாம் வலியுறுத்தினோம். **1981** ஜனவரி **8** அன்று டாக்டர் சுகுமார் சென் உட்பட பல அறிவுஜீவிகள் மேற்கு வங்க கவர்னர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜனவரி **27** அன்று மாபெரும் மாநாடும் நடந்தது. பிப்ரவரி **2** அன்று செயலகத்தை நோக்கி பேரணியும் நடந்தது. பிறகு பிப்ரவரி **16** முதல் **21** வரை தனிச்சிறப்பு வாய்ந்த போராட்டங்கள் நடந்தன. முதல்நாள் சட்ட மறுப்புப் போராட்டத்தில் டாக்டர் நிஹார் ரஞ்சன் ராய் பங்கேற்றார். டாக்டர் சுகுமார் சென் உடல்நிலை சரியின்றி நடக்க இயலாததால் பங்கு பெறவில்லை.*

*மற்ற எல்லோரும் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கு கொண்டனர். உடல் ஊனமுற்றவராக இருந்தாலும் பிரசித்தி பெற்ற டாக்டர் கௌரி ஆயுப் பங்கேற்றார். அதன்பிறகு பெண்கள், பின்னர் ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் என ஆர்ப்பாட்டத்தில் வரிசையாகப் பங்கேற்றனர். இந்தப் போராட்டம் மாநிலத்தைத் தாண்டி நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்தது. போராட்டம் மேலும் தொடர்ந்தது. **1996** அக்டோபர் **17** அன்று மாநில முழுவதும் **1** கோடி கையெழுத்துக்களுடன் பல்வேறு கோரிக்கை களடங்கிய மனுவை சமர்ப்பித்தோம். இறுதியாக **1998** பிப்ரவரி **3** அன்று ஆரம்பப் பள்ளியில் ஆங்கிலத்தையும் பாஸ் ஃபெயில் தேர்ச்சி முறையையும் மீண்டும் கொண்டுவரச் சொல்லி முழு கடையடைப்பு (பந்த்) நடத்தினோம். இது மாபெரும் வெற்றி பெற்றது. வருடமுழுதும் நடைபெற்ற **19** வருட போராட்டங்களின் அழுத்தத்தினால் **1998** டிசம்பர் **21** அன்று ஆங்கிலத்தை மீண்டும் சிபிஐ (எம்) அரசாங்கம் ஆரம்பக் கல்வியில் சேர்த்தது. ஆனால் பாஸ் ஃபெயில் தேர்வு முறை புகுத்தப்படாமல் தடையற்ற தேர்ச்சி கொள்கையே தொடர்ந்தது. ஆகவே, எமது முன்முயற்சியில் துவக்கப்பட்ட துவக்கக் கல்வி வாரியத்தினால் நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு இன்றுவரை உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) தேர்வு தொடர்ந்து நடத்தப்படுகிறது, பல இலட்சக்கணக்கான மாணவர்கள் தேர்வெழுதுகிறார்கள்.*

*இந்த அறிவுஜீவிகள் இதற்கு முன்பு எந்த மக்கள் போராட்டங்களிலும், சுதந்திரப் போராட்டத்திலும் அதற்குப் பிந்திய எந்தப் போராட்டதிலும் பங்கு பெற்றவர்களல்லர். அத்தகையவர்களை போராட்டத்தின் முக்கியத் துவம் குறித்து ஏற்றுக்கொள்ளச் செய்ததும், சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கு பெற வைத்ததும் அப்போக்கில், நமது கட்சியின் கருத்துக்களின் செல்வாக்கை அவர்கள் உணரச் செய்ததும் தோழர் மணிக் முகர்ஜியுடைய சாதனையாகும். இது தொடர்பாக, முன்னணி வங்க நாளிதழ் ஆனந்தபஜார் பத்திரிகையின் முன்னணி ஊடகவியலாளர் சந்தோஷ் கோஷைப் பற்றியும் இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும். முன்பு அவர் கம்யூனிச எதிர்ப்பாளராக இருந்தார். ஆனால் தோழர் மணிக் முகர்ஜியின் தொடர்பில் வந்த பிறகு அவருடன் பல்வேறு பிரச்சினை களைப் பற்றி விவாதித்த பிறகு, நம்மைப் போன்ற கம்யூனிஸ்டுகளுடன் இளமையிலேயே பழகி யிருந்தால் கம்யூனிசத்தைப் பற்றிய குழப்பத்தைக் கொண்டிருந்திருக்க மாட்டேன் என்றார். அவர் ரவீந்திரநாத் தாகூர் ஆதரவு குழுவைச் சேர்ந்திருந்தார். சரச்சந்திரருக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. சரச்சந்திரர் உள்ளத்தின் உணர்வுகளைக் கொண்டிருந்தார் ஆனால் அறிவுப்பூர்வமான திறமையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தோழர் மணிக் முகர்ஜி அவருக்கு சரச்சந்திரரைப் பற்றி தோழர் சிப்தாஸ் கோஷின் ஆய்வுகளை முன்வைத்த பிறகு அந்த ஊடகவியலாளர் சரச்சந்திரரைப் பற்றிய நமது ஆய்வை ஏற்றுக் கொண்டார். இதே மஹாஜதி சதன் அரங்கில் அவர், சரச்சந்திரரைப் பற்றி தனது முந்தைய புரிதல் தவறாக இருந்தது எனக் கூறினார். அந்த நாளிதழை வங்கத்தில் பிரபலமாக்கியவர் இந்த ஊடகவியலாளர்தான். ஆனால் நமது மொழிப்போராட்டத்திற்கு ஆதரவாக வலிமையான தலையங்கங்களை எழுதியதால் அந்த நாளிதழின் நிர்வாகத்துடன் கடுமையான முரண்பாட்டிற்கு ஆளானார். அப்பொழுது இருந்த நாளிதழின் உரிமையாளர் ஆசோக் சர்கார், நாளிதழின் வெற்றிக்குக் காரணமான சந்தோஷ் கோஷ் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தார். அவரது மகன், சந்தோஷ் கோஷை மாமா என்று அன்புடன் அழைப்பார்.*

*ஆனால் அசோக் சர்கார் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிக்கு பரம விரோதி. அவர் சந்தோஷ் கோஷை எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) ஆளாக மாறிவிட்டாயாயென ஏளனமாக கேட்டார். இதனால் கோபமுற்ற சந்தோஷ் கோஷ் இருமுறை ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துவிட்டார். ஆனாலும் அசோக் சர்கார் அவரை ஆசுவாசப் படுத்தி தன்னுடன் வைத்துக் கொண்டார். ஏனென்றால், அவர் நாளிதழின் சொத்தாகக் கருதப்பட்டார். அதேபோல, டாக்டர் சுகுமார் சென், தான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றார். கல்விதான் தனது அரசியல் என்றார். எனவே நாம் துவக்கிய கல்வி இயக்கத்தில் ஈடுபட்டதாகக் கூறினார். அவர் சிபிஐ(எம்)முடன் தொடர்பில் இருந்தவர். ஒருமுறை அவரது மாணவர் அவரைப்பார்த்து, ' சார், கடைசியில் நீங்கள் எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) குடைக்குக் கீழ் சென்றுவிட்டீர்களே' என்று கேட்ட பொழுது, 'அவர்கள் என் தலைமீது குடையைப் பிடித்தார்கள், தடியால் தலையை அடிக்கவில்லை' என்று பதிலளித்தார்.*

*பிரமாதநாத் பிஷி என்ற பிரசித்தி பெற்ற எழுத்தாளர், நமது இளம் தோழர்களைக் கண்டபோதெல்லாம், தான் இளம் வயதில் பார்த்த சுதந்திரப் போராட்ட நினைவுகள் தோன்றுவதாக காலஞ்சென்ற நமது தோழர் சுபிர்பாசு ராய் யிடம் கூறியிருக்கிறார். ஆரம்பப் பள்ளி மாணவர்களை வைத்து (அமர்வு) ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டு மென நம்மிடம் ஆலோசனை முன்வைத்ததும் அவர்தான். அதை ஏற்றுக் கொண்டு மாநிலம் முழுதும் பள்ளி மாணவர்களைத் திரட்டி மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்தினோம். முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அரவிந்த போஸும் நமக்கு நெருக்கமாக வந்தார். 'மாணவர் போராட்டக் கமிட்டி' என்ற பேனரில் (பதாகையின் கீழ்) கொல்கத்தா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் டாக்டர் நிஹார் ரஞ்சன் ராய் சென்று உரையாற்றினார். அவரும் அப்பொழுது தனது இளம்பருவ சுதந்திர போராட்ட காலம் நினைவில் வருவதாகக் கூறினார். முன்னணி அறிவுஜீவிகளை ஈடுபடுத்தி இவ்வனைத்து இயக்கங்களையும் நடத்துவதில் அச்சாணி பாத்திரமாகச் செயல்பட்டவர் தோழர் மணிக் முகர்ஜி என்பதை எடுத்துக் காட்டவே இவ்வளவு சம்பவங்களையும் நான் சுட்டிக் காட்டுகிறேன்.*

*நீதியரசர் வி ஆர் கிருஷ்ணைய்யர் தலைமை யிலும் சர்வதேசப் புகழ்பெற்ற விஞ்ஞானி பேரா சுசில்குமார் முகர்ஜியை செயலாளராகவும் கொண்டு துவக்கப்பட்ட அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டியின் துணைத் தலைவராக தோழர் மணிக் முகர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் தோழர் மணிக் முகர்ஜிதான் கமிட்டியின் எல்லா செயல்பாடுகளையும் மேற்பார்வை யிடுவார். அவர் வளர்த்தெடுத்த அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டி இயக்கம் இன்னமும் பீடுநடை போடுகிறது.*

*பின்னாளில் அப்போதைய பொதுச் செயலாளர் தோழர் நிஹார் முகர்ஜி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை நடத்தும் பொறுப்பை தோழர் மணிக் முகர்ஜிக்கு வழங்கினார். இந்த இயக்கத்தில் பங்களாதேசத்திலிருந்து தோழர் மொபினுல் ஹைதரும் இருந்தார். இவ்விருவரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை சர்வதேச அளவில் வளர்த்தெடுப்பதில் முக்கியப் பங்காற்றினர். இதற்கு முன்பு லண்டனில் சரச்சந்திரர் குறித்து உரையாற்ற மணிக் முகர்ஜி அழைக்கப்பட்டி ருந்தார். பிபிசி வங்க மொழி அலைவரிசை அதனை ஒலிபரப்பியது. பெல்ஜியத்தைச் சார்ந்த தொழிலாளர் கட்சி அதன் தலைநகர் பிரஸெல்ஸில் தாங்கள் கம்யூனிஸ்ட் என்று கருதும் கட்சிகளை அழைத்து மாநாடு நடத்தி வந்தனர். இந்தியாவிலிருந்து நக்சலைட்டுகளும் நமது கட்சியும் அழைப்பிதழ் பெற்றன. நமது கட்சி சார்பில் பெரும்பாலும் தோழர் மணிக் முகர்ஜி அந்த மாநாடுகளில் கலந்து கொள்வார். அவர் ஜெர்மனிக்குச் சென்று கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிச இயக்கத்துடன் தொடர்புடையவர் களுடன் பேச்சுவார்த்தையை துவக்கினார். அவர் ஃபிரான்ஸ் மற்றும் இங்கிலாந்திற்கும் இதற்காகச் சென்றார். **1995**ல் கொல்கத்தாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாட்டில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நீதியரசர் வி ஆர் கிருஷ்ணைய்யர் அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். **2007**ல் கொல்கத்தாவில்*

தொடர்ச்சி 5ம் பக்கம்

## தோழர் மணிக் முகர்ஜியின் அஞ்சலி கூட்டம் . . .

# அறிவைப் பெறும் மனநிலையையும் பகுத்தறிவு சிந்தனையையும் முதலாளித்துவம் அழித்து வருகிறது. இந்த நயவஞ்சகத் திட்டத்தை எதிர்த்து நமது தோழர்கள் போராட வேண்டும்

*4ம் பக்கத் தொடர்ச்சி*

நடந்த மாநாட்டிற்கு அமெரிக்க அட்டர்னி ஜெனரல் ராம்சே கிளர்க் தலைமை தாங்கினார். அவர் நந்திகிராம் சென்று அங்கு போராடிய விவசாயிகளைச் சந்தித்தார். நேபாளில் முடியாட்சி கவிழ்ந்து, முதல் தேர்தல் நடந்து மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தது. தேர்தலின் போது மேற்பார்வையிட அக்கட்சி ராம்சே கிளர்க்கை அழைக்க தோழர் நிஹார் முகர்ஜியை நாடியது. தோழரின் அழைப்பிற்கிணங்க ராம்சே கிளர்க் நேபாள் சென்று தேர்தலை மேற்பார்வை யிட்டார். ஈராக் மீது அமெரிக்கா போர் துவக்க விருந்த அச்சமயத்தில் பாக்தாத்தில் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாட்டில் அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கத்தின் சார்பில் மணிக் முகர்ஜி பங்கேற்றார்.

மற்றுமொரு சர்வதேச மாநாடு லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடைபெற்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, ஃபிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, ரஷ்யா, துருக்கி, ஈராக், சூடான், சிரியா, கியூபா, பங்களாதேசம் மற்றும் வேறு சில நாடுகளின் பிரதிநிதிகள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். லெபனானைச் சேர்ந்த ஹெஸ்போலா அமைப்பும் மாநாட்டில் கலந்து கொண்டது. இம் மாநாட்டில் தலைமை ஒருங்கிணைப்பாளர் போன்று தோழர் மணிக் முகர்ஜி அம்மாநாட்டில் செயல்பட்டார். ஹெஸ்போலா தலைவரும் மணிக் முகர்ஜியைச் சந்தித்தார். இந்த அமைப்பின் பிரதிநிதிக் குழு கொல்கத்தா வந்து மணிக் முகர்ஜியைச் சந்தித்து. இத் தலைவரின் மகன்தான் இஸ்ரேலால் ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டார். இறந்த தனது மகனின் ரத்தக் கறை படிந்த சட்டையை அத்தலைவர் கொல்கத்தாவில் காண்பித்தார்.

தோழர் மணிக் முகர்ஜி பல்வேறு நிகழ்ச்சி களுக்கான அழைப்பிதழை ஏற்று சூடான், சிரியா, துருக்கி, கனடா, கியூபா, வெனிசூலா, மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளுக்கு மணிக் முகர்ஜி சென்றார். வடகொரியாவிற்கும், அதன் தலைவர் காலஞ்சென்ற கிம் இல் சுங் ன் நினைவு நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள தோழர் மணிக் முகர்ஜி அழைக்கப்பட்டார். சென்ற இடங்களிலெல்லாம், நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை நடத்த வேண்டிய அவசியத்தையும், மார்க்சிசம் லெனினிசம் என்ற அறிவியல்பூர்வ சித்தாந்தத்தை வளர்த்து செழுமைபடுத்தும் வகையில் தோழர் சிப்தாஸ் கோஷின் மதிப்புமிக்க பங்களிப்பு களையும் வலியுறுத்துவார். இவ்வாறு பல்வேறு நாடுகளுக்கு செல்வதும், பல்வேறு கட்சிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதும், அவர்களுடன் முழுமையான விவாதத்தில் ஈடுபடுவதும், நம்மை நோக்கியும், தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையை நோக்கியும் ஈர்ப்பதிலும், அவர்களை பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துவதும் இவையாவிலும் தோழர் மணிக் முகர்ஜியின் பங்களிப்பு மிகுந்த முக்கியம் வாய்ந்தது.

புரட்சியாளர்கள் நோக்கமின்றி எந்த வேலையையும் மேற்கொள்வதில்லை. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பின்னால் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். உண்பதாகட்டும் உறங்கு வதாகட்டும் இசையை ரசிப்பதாகட்டும் கூட்டம் நடத்துவதாக இருக்கட்டும் கட்சி வேலை ஒன்றை நிறைவேற்றுவதாக இருக்கட்டும் திரைப்படம் பார்ப்பதாக இருக்கட்டும் எல்லாவற்றிற்கும் பின்னால் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். புரட்சி நோக்கமின்றி எந்த வேலையும் இருக்கக் கூடாது. புரட்சிக்கு சேவை செய்வதைத்தவிர வேறெதற்கும் மனதில் எந்த சிந்தனையும் எழக்கூடாது. கைப்பேசியைப் பார்ப்பதும்கூட புரட்சிகர நோக்கத்திற்காகத்தான் இருக்க வேண்டும். அறிவை வளர்த்துக் கொள்வதும் புத்தகம் வாசிப்பதும் சமுதாயத்திலிருந்து மறைந்து



**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ்**

வருகிறது. அறிவைப் பெறும் மனநிலையையும் பகுத்தறிவு சிந்தனையையும் முதலாளித்துவம் அழித்து வருகிறது. முதலாளித்துவத்திற்கு சேவை செய்யும் கட்சிகளும் மக்களிடையே குருட்டுத்தனத்தை வளர்க்கும் நயவஞ்சகச் செயல்களில் ஈடுபடுகின்றன. இந்த நயவஞ்சகத் திட்டத்தை எதிர்த்து நமது தோழர்கள் போராட வேண்டும். நம்முடன் தொடர்பில் வரும் புதிய தோழர்கள் நேர்மையானவர்களாக இருக்கின்றனர். ஆனால் அதே சமயம் இந்த அழுகிப்போன சமுதாயச் சூழல் அவர்கள் மீதும் தாக்கத்தைச் செலுத்துகிறது. எனவே தொடர்ந்து படிப்பதும் உண்மையை அறிவதும் இன்றியமையாததாகும். வெறும் விவரங்களால் மண்டையை நிரப்பிக் கொள்வதல்ல, சாராம்சத்தைத் திரட்டி அவ்வாறு உணர்ந்த உண்மையை வாழ்கையில் பிரயோகித்து கடைபிடித்து தன்னை மாற்றிக் கொள்ள போராட வேண்டும். இது மிகமுக்கியம். நம்மில் பெரும்பாலானோர் குட்டி முதலாளித்துவ குடும்பங்களிலிருந்து வந்திருக்கிறோம். குட்டி முதலாளித்துவ குணத்தை பராமரித்துக் கொண்டு புரட்சி பதாகையை உயர்த்திப் பிடிக்க முடியாது. எனவே குட்டி முதலாளித்துவ அல்லது முதலாளித்துவ சிந்தனை நம்மை எங்கே கொண்டு செல்கிறது என்பதில் நாம் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும். நாம் வாழ நினைக்கும் வாழ்க்கைக்கு, நடத்தை முறைக்கு அந்த சிந்தனை உகந்ததாக இருக்கிறதா? தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையில் நம்மை நாம் சுய பரிசோதனை செய்து கொண்டே இருக்க வேண்டும். நம்மை தொடர்ந்து மாற்றிக் கொள்ளும் போராட்டத்தில், அதன் மூலம் தரம் உயர்த்திக்கொள்ளும் போராட்டத்தில், எப்போதும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

நமது நாடு என்ன கதியில் இருக்கின்றதென நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். உலக கம்யூனிச இயக்கத்திலும் தீவிரமான நெருக்கடி நிலவுகிறது. உலகின் ஒவ்வொரு மூலையிலும் என்ன நடக்கிறதென்பது நமக்குத் தெரியாது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பெருமையை மீட்டெடுக்க எதோ ஒரு சக்தி எங்கோ ஒரு மூலையில் தீவிரமாக முயற்சிக்கலாம், சோவியத் யூனியனிலும் சீனாவிலும் சோசலிசம் தகர்ந்த பிறகு உலகின் பெரும்பாலான கம்யூனிஸ்ட் கட்சிகள் காணாமல் போய்விட்டன. ஆனால் நமது கட்சி உறுதியாக இருக்கின்றது. சோசலிசத்தின் வீழ்ச்சி நமக்கு வேதனையளித்த போதிலும் நாம் விரக்தியால் பீடிக்கப்படவில்லை. ஏனெனில் தோழர் சிப்தாஸ் கோஷ் எங்களை மனதளவில் ஏற்கெனவே இதுபோன்ற திருத்தல்வாத தாக்குதல்களுக் கெல்லாம் தயார்படுத்திவிட்டார். புரட்சியை இந்தியாவில் நடத்தி சர்வதேசிய அளவிலும் நமது பாத்திரத்தை வகிக்கும் வரலாற்றுக் கடமை நம்மீது சுமத்தப்பட்டுள்ளது. இங்கு கூடியிருப்போரில் பலர் அப்போது உயிருடன் இல்லாமல் இருக்கலாம். எனவே இளைய தலைமுறை யினரான இளங்கம்யூனிஸ்டுகள் (காம்சொமால்), அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம், அகில

## 141 பாராளுமன்ற உறுப்பினர்களை தற்காலிகமாக நீக்கிய ஃபாசிச நடவடிக்கையை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாக கண்டிக்கிறது

*மத்திய அரசாங்கத்தின் மேற்கண்ட மிக மோசமான நடவடிக்கையைக் கண்டித்து எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 20.12.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

இம்மாதம் 13 ஆம் தேதி பாராளுமன்றத்தில் பாதுகாப்பு மீறி நடந்த சம்பவத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அரிக்கை தரவேண்டும் என எதிர்க் கட்சி எம்பிக்கள் கோரியது சட்டப்படியும் தார்மீகப்படியும் மிகச் சரியானதே. ஆனால் அக்கோரிக்கைக்கு பதில் அளிக்காமல் பாஜக அரசாங்கமானது மேலவை கீழவை ஆகிய அவைகளைச்சார்ந்த 141 எதிர்க் கட்சி எம்பிக்களை தற்காலிகமாக பதிவி நீக்கம் செய்துள்ளது. இச் சம்பவம் நமது நாட்டில் முன்னெப்போதும் கண்டிராதது மட்டுமல்ல வேறு எந்த நாடுகளிலும்கூட கண்டிராததாகும். இச் செயல், மிஞ்சி இருக்கும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் மரபைக்கூட துச்சமெனக் கருதி, நாட்டில் ஃபாசிச எதேச்சதிகாரத்தை மேலும் இறுகச் செய்யும் பாஜக அரசாங்கத்தின் மோசமான தொடர் செயல்பாட்டில் ஒன்றாகும்.

இந்த முற்றிலும் ஜனநாயக விரோதச் செயலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். எம்பிக்களின் இடைநீக்கத்தை திரும்பப் பெற வேண்டும். ரூ836 கோடியில் ஓகோ வென்று புகழ்பாடி பிரதமரால் திறக்கப்பட்ட புதிய நாடாளுமன்ற வளாகத்தில் எவ்வாறு பாதுகாப்பினை மீறப்பட்டது என்பதைக் குறித்த அறிக்கையை உள்துறை அமைச்சர் வெளியிட வேண்டும். ஜனநாயக விதிகளை திட்டமிட்டு அரித்துச் செல்லும் பாஜக அரசாங்கத்தின் தவறான நடவடிக்கை களை அனைத்துத் தரப்பு ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களும் ஒருமித்த குரலில் எதிர்க்க வேண்டும் ■

இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்கள் மேன்மேலும் பொறுப்புகளை சுமக்கத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நமது கட்சி முதலாளித்துவத்தால் தொடர்ந்து தாக்கப்படுகிறது. தாக்குதல் என்றால் உடல் ரீதியாக மட்டுமென்று அர்த்தமல்ல. அதற்கும் மேலாக முதலாளித்துவ கலாச்சாரத்தால், சிந்தனைகளால், ஆசைகளால், மோகங்களால், சொத்துகளை நாடும், சுகபோக வாழ்க்கையை நாடும் பேராசைகளால், பிள்ளைகளின்மீது கணவன் அல்லது மனைவிமீது தனிப்பட்ட அன்பினால் உருவாகும் பலவீனத்தால், பலமுனைகளில் நாம் தாக்கப் படுகிறோம். இவற்றைக் குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு தோழர் சிப்தாஸ் கோஷ் பலமுறை கூறியுள்ளார்.

தனக்கு விதிக்கப்பட்ட எல்லா பொறுப்பு களையும் செவ்வனே நிறைவேற்ற தோழர் மணிக் முகர்ஜி மிகவும் சிரமமெடுத்துள்ளார். தோழர் மணிக் முகர்ஜிக்கு மரியாதை செலுத்தும் இவ்வேளையில் அவரைப்போன்று, கட்சி நமக்கு அவ்வப்போது கொடுக்கும் பொறுப்புகளை நிறைவேற்றி நாமும் தோழர் சிப்தாஸ் கோஷின் மாணாக்கர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். தோழர் மணிக் முகர்ஜியின் வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து பாடங்களை நாமும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே நாம் அவருக்குச் செய்யும் சரியான அஞ்சலி ஆகும் ■

## மாபெரும் தலைவர் லெனினின் நினைவு நூற்றாண்டு . . .

# எக்காலத்திலும் ஒருவர் மேதையாகப் பிறந்திட முடியாது. மேதமை என்பதும் ஒரு செயல் முறைப்போக்கின் விளைவே!

*1ம் பக்கத் தொடர்ச்சி*

அடுத்ததாக, கட்சியில் எவர் உறுப்பினராக இருக்க முடியும் என்பதாகும். கட்சியின் உறுப்பினர்களாக வாழ்முறை புரட்சியாளர் அன்றி வேறெவரும் இருக்க முடியாது என லெனின் உறுதியாகக் கூறினார். கட்சியின் கொள்கைகளையும் ஆய்வுகளையும் எவரெல்லாம் ஏற்கின்றனரோ அவர்களெல்லாம் உறுப்பினராக ஆகலாம் என மற்றவர்கள் கருத்து கொண்டிருந்தனர். இதனை லெனின் மறுத்தார்.

இது ஏற்கப்பட்டால் எவர் வேண்டுமானாலும் கட்சியின் உறுப்பினராக ஆகிவிடலாம். ஒரு புரட்சிகர உழைக்கும் வர்க்கத்தின் கட்சியானது இவ்வாறு ஒருபோதும் வளர முடியாது. கட்சியின் விதிமுறைகளையும் கோட்பாடுகளையும் உறுப்பினர்கள் கடைபிடிக்கின்றனரா என்பதும் கட்சியின் ஒழுங்கு முறையைக் கடைபிடித்துக் கொண்டு ஏதேனும் ஒரு கட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றுகின்றனரா என்பதை ஆராய்வது முக்கியமாகும். இதன் காரணமாக ஆர்எஸ்டிஎல்பி போல்ஷ்விக்குகள் மற்றும் மென்ஷ்விக்குகள் என இரு குழுக்களாகப் பிளவுற்றது. பின்னர் 1912ல் போல்ஷ்விக் கட்சி முறையாக உருவாக்கப்பட்டது.

ஆக, லெனின் அவர்கள்தான் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் மதிப்புவாய்ந்த தொடர்ச்சியாளராக, ஒரு கம்யூனிஸ்ட் கட்சியானது எவ்வாறு உருவாக்கப்படல் வேண்டும், பாட்டாளி வர்க்க ஜனநாயகம் மற்றும் மத்தியத்துவத்தை இணைப்பதின் மூலம் எவ்வாறு ஜனநாயக மத்தியத்துவம் வளரும், பல்வேறு கட்சி அமைப்புகள் பல்வேறு மட்டங்களில் எவ்வாறு வளர்ச்சியடையும் மற்றும் அவற்றிற்கிடையிலான பரஸ்பர உறவுகள் எவ்வாறிருக்க வேண்டும் மற்றும் கட்சியின் அத்தாரிட்டிக்குக் கீழ்ப்படிந்து கட்சி உறுப்பினர்கள் ஒரு ஒழுங்கு முறையில் அவர்களே எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் போன்ற எண்ணற்ற கேள்விகளில் சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார்.

### பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் குறித்து

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கேள்வியை மையமாக வைத்த விவாதங்களும் நடைபெற்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசத்திற்கும் இடையேயான மாறுகின்ற இடைப்பட்ட கட்டம் என மார்க்ஸ் கூறியிருக்கின்றார். அதனை லெனின் நடைமுறைப்படுத்திட முயற்சித்தபோது, ஜனநாயகத்தை கொலை செய்கின்றார் என மற்றவர்கள் லெனினைக் குற்றம்சாட்டினர். அவர்கள் மிகவும் கவலைப்படுகின்ற ஜனநாயகம் என்பது பூர்ஷ்வா சர்வாதிகாரம் அன்றி வேறெதுவுமில்லை என்பதனை லெனின் சுட்டிக்காண்பித்து அவர்கள் கூற்றை நிராகரித்தார்.

அதாவது, அவர்களின் ஜனநாயகம் என்பது பூர்ஷ்வாக்களுக்குச் சாதகமானதாகவும் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான சர்வாதிகாரமாகவும் இருக்கும் என்பதாகும். அதற்கு மாறாக, சோசலிசம் என்பது உழைக்கும் வர்க்கத்திற்கான ஜனநாயகமாகவும் பூர்ஷ்வாக்களுக்கு எதிரான சர்வாதிகாரமாகவும் இருக்கும்.

லெனின் அவர்கள் மார்க்ஸின் இக்கோட்பாட்டை பல்வேறு கோணங்களிலும் வளர்த்தெடுத்துள்ளார். அமைதிவழி மூலமாக புரட்சியை அடையப் பெறமுடியாது என மார்க்ஸ்தான் விளக்கியுள்ளார். பாரிஸ் கம்யூனின் அனுபவத்தின் அடிப்படையில், உழைக்கும் வர்க்கம் பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை உடைத்தெறிந்தாக வேண்டும் என்றும்கூட மார்க்ஸ் கற்றுத்தந்துள்ளார்.

### ஒரு உண்மையான கம்யூனிஸ்டுக்கான செழுமைப்படுத்தப்பட்ட கோட்பாடு

நவம்பர் புரட்சிக்கு முன்பாக ரஷ்யாவில் பிப்ரவரி புரட்சி நடைபெற்றபோது, மக்களின் பிரதான கோரிக்கையானது தனிநபர் விடுதலையைப் பெறுவதற்காகவே இருந்தது. போல்ஷ்விக் கட்சியும்கூட தனிநபர் விடுதலை என்ற கோஷத்தையே எழுப்பியது. தோழர்கள் இதனை முறையாக மனதில் கொள்ள வேண்டும்.

வங்க எழுத்தாளர் சரச்சந்திரரின் புகழ்பெற்ற பதேர்தாபி (பாதை வேண்டும்) என்ற நாவலில் அதில் வரும் பாத்திரங்களில் ஒன்றான அபூர்வா என்பவன் புரட்சிகர இயக்கத்திலிருக்கும் ஒரு விடுதலைப் போராளியான ராமதாஸ் தல்வார்க்கரிடம், "திருமணம் செய்தபின் ஏன் இந்த புரட்சிகர இயக்கத்தினுள் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள் எனக் கேட்கிறான். அதற்கு அவர், "பாபுஜி, திருமணம் என்பது ஒரு தர்மம். ஆனால், மாபெரும் தர்மம் என்பது நாட்டின் விடுதலைக்காகப் பணி செய்வது. மாபெரும் தர்மத்திற்கு முன்பாக அதைவிட சிறிதான தர்மம் அதற்குத் தடையாக இருக்குமெனில், நான் திருமணம் செய்திருக்க மாட்டேன்." என்று பதிலுரைக்கின்றார்.

இதன் பொருள் நாட்டின் நலனே முதன்மையானது என்பதாகும். தனிநபர் விடுதலையின் தேவை மற்றும் தனிநபர் குடும்பத்தின் தேவையை விட விடுதலை இயக்கத்தின் தேவை முதன்மையானது. தனிநபர் நலன் என்பது புரட்சியின் நலனுக்கு கீழ்ப்பட்டதே என சோவியத் அரசியலமைப்புச் சட்டத்திலும்கூட எழுதப்பட்டிருக்கின்றது. இதனை தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், இது பிரதானமாக பூர்ஷ்வா மனிதாபிமான மதிப்புகள் கோட்பாடாக இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார்.

இரஷ்யாவில் இந்த பூர்ஷ்வா மனிதாபிமான மதிப்புகளின் தாக்கம் நவம்பர் புரட்சியின்போதும் புரட்சிக்குப் பின்னரும் வெகுகாலம் இருந்தது என தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக்காண்பித்திருக்கின்றார். ஏகாதிபத்தியம்–நிலப்பிரபுத்துவத்துக்கெதிரான புரட்சியாக இருந்ததினால், சீனப்புரட்சியிலும்கூட அதன் தாக்கம் இருந்தது. தனிநபர் நலன் என்ற கோட்பாடு புரட்சியின் நலனுக்கு அடிபணிந்து நடப்பது என்றிருப்பதால் அதன் தயாரிப்புக் காலகட்டத்தில் புரட்சியின் தேவையைப் பூர்த்திசெய்திடுவதில், ஆட்சியைக் கைப்பற்றிட கிளர்ச்சி செய்த போதும் பின்னர் சோசலிசக் கட்டுமான காலகட்டம் வரையிலும் அதன் தாக்கம் இருந்தது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சோசலிசப் பொருளாதாரத்தின் பிரம்மாண்டமான முன்னேற்றம் மற்றும் நிலைத்தன்மையின் பிந்தைய கட்டத்தில் இதே கோட்பாடு 'சோசலிசத் தனிநபர்வாதம்' எனும் புதிய நிகழ்வை உருவாக்கி சோசலிச அமைப்பை ஆபத்திற்குள்ளாக்கியது. உயர்ந்த கம்யூனிச மதிப்புகள் என்பது தனிச் சொத்தை ஒழிப்பது மட்டுமின்றி 'தனிச்சொத்து மனப்பான்மை'யிலிருந்து விடுவித்துக் கொண்டு அதன் மூலம் வர்க்கம், புரட்சி மற்றும் கட்சியின் நலனுடன் ஒருவர் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டும் என வேண்டுகிறது. இப்போதனையை இடையிடையே நினைவு படுத்தினாலும் அது விவாதிக்கும் பொருளுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

### மார்க்சிசத்தின் சாராம்சத்தை லெனின் உட்கிரகித்துக்கொண்டார்

லெனின் மார்க்சிசத்தை சரியாக ஈர்த்துக் கொண்டார். சர்வதேசிய சூழ்நிலையையும் இரஷ்ய சூழ்நிலையையும் ஆய்வு செய்வதில் மார்க்சிசத்தை அவரால் சரியாகப் பிரயோகித்திட முடிந்ததால், இந்த செயல்முறைப் போக்கில் அவரால் மார்க்சிசத்தை மேலும் வளர்த்திடவும் செழுமைப் படுத்திடவும் முடிந்தது. பூர்ஷ்வா கோட்பாடுகளை எதிர்த்து போராடியதன் மூலம் இரஷ்யாவில் ஏன் மார்க்சிசம் தேவைப்பட்டது என்பதை அவரால் நிலைநாட்ட முடிந்தது.

அதே சமயம், பிளக்னோவ், ட்ராட்ஸ்கி மற்றும் பிறரது தவறான கோட்பாடுகளை எதிர்த்து நின்றதன் மூலம் மார்க்சிசத்தின் சரியான புரிதலை அவர் வழங்கியுள்ளார். அவரது பாத்திரத்தையும் தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில் பின்னர் அரை மணி நேரமாக நான் இன்று விவாதித்தவைகளைப் புரிந்து கொண்டு கையாள்வது அத்தனை சுலபமில்லை.

லெனின் ஐரோப்பா மற்றும் மாபெரும் இரஷ்யாவின் இரண்டாம் அகிலத் தலைவர்களின் மாணவராகத் துவங்கியதால், மார்க்சிசத்தின் சாராம்சத்தை உள்வாங்கிக் கொண்டதனால் அவர்களின் விலகல்களை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எனவே, தத்துவார்த்த ரீதியில் அவர்களை எதிர்த்து அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டிட வேண்டியிருந்தது. அவ்வாறு செய்ததின் போக்கில், மார்க்சிசத்தின் சரியான புரட்சிகரப் புரிதலையும், மாறிய சர்வதேசிய சூழ்நிலையில் ஒருவர் அத்தகைய புரிதலை எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் இரஷ்யாவின் பருண்மையான சூழ்நிலையில் அதனை எவ்வாறு பிரயோகித்திட வேண்டும் என்பதையும் அவர் வழங்கினார்.

நாட்டின் நாடித்துடிப்பை உணர்ந்துகொள்வதற்கும் உழைக்கும் வர்க்கத்தின் அதனுடன் பெரும்பான்மை மக்களின் மனநிலையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் எல்லாவற்றிற்கும் மேலாக பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர், சோசலிசப் புரட்சியை நிறைவேற்றிட இதுதான் சரியான நேரம் என்பதைப் உணர்ந்திடவும் மார்க்சிசத்தின் எத்தகைய உயர்ந்த புரிதல் தேவைப்பட்டிருக்கின்றது.

நவம்பர் புரட்சிக்கான அறைகூவல் விடுத்த நேரத்தில் சில பேர், மார்க்ஸ் கூற்றுப்படி புரட்சியானது முதலில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில்தான் வெடிக்கும். ஆனால் இரஷ்யாவில் முதலாளித்துவம் வளர்ச்சியுறவில்லை. பின்னர் இங்கு புரட்சியை எங்ஙனம் நிறைவேற்றிட முடியும்? என்று வாதிட்டார்கள்.

அவர்கள் மார்க்ஸின் படைப்புக்களை மேதாவித்தனமாகப் படித்திருக்கின்றனர் என்றும் ஆனால் அவர்கள் மார்க்சிசப் பகுப்பாய்வு முறையியலைப் புரிந்து கொள்ளவில்லை எனவும் அவர் அவர்களுக்குப் பதிலளித்தார். ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளில் முதலாளித்துவத்தின் சமமற்ற வளர்ச்சியினால் முன்பு பார்த்ததுபோல் முதலாளித்துவம் வளர்ச்சியுற முடியாது. மேலும் பெரும் ஏகாதிபத்திய சக்திகள் பின்தங்கிய அதாவது வளர்ச்சியடையாத நாடுகளில் முதலாளித்துவம் செழித்து வளர அனுமதிக்காது.


எனவே, இச்சகாப்தத்தில் தொழிற் புரட்சியை பூர்ஷ்வாக்களில் தலைமையின்கீழ் நடத்திட முடியவில்லை. அது உழைக்கும் வர்க்கத்தின் தலைமையின்கீழ் மட்டுமே நடத்திடமுடியும். தொழிற்புரட்சியானது அப்போதுதான் முழுமையான வெற்றியை அடையமுடியும். கருத்தியல் களத்தில் இத்தகைய பல போராட்டங்களை லெனின் நடத்திட வேண்டியிருந்தது. நவம்பர் புரட்சியின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள வேண்டுமாயின், லெனினது இத்தகைய தன்னிகரில்லா பாத்திரத்தையும் மதிப்பிற்கரிய பங்களிப்புக்களையும் ஒருவர் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

### மார்க்சிசப் புரிதல் உயிரோட்டமுள்ளதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருக்கவேண்டும்

மார்க்சிசத்தின் சரியான புரிதலையும் பிரயோகத்தையும் லெனின் அவர்களால் எவ்வாறு வெற்றிகரமாக வழங்கிட முடிந்தது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

**புதுச்சேரி**




**புதுச்சேரியை ஆளும் என்ஆர் காங்கிரஸ்–பாஜக அரசாங்கம் மின்சார கட்டண உயர்வையும், ப்ரீபெய்ட்–ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தையும், மின்சாரத்துறையை தனியார்மயமாக்குவதையும் கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்**

## மாபெரும் தலைவர் லெனினின் நினைவு நூற்றாண்டு . . .

# சோசலிசத்தினுள்ளே அதற்கான ஆபத்து இருந்ததை லெனின் எச்சரித்தார்

6ம் பக்கத் தொடர்ச்சி

தனிநபர் ஆற்றும் பாத்திரம் பற்றிய கேள்வியானது இங்குதான் எழுகிறது. இதனை முறையாக உணர்ந்திடுவது தேவைப்படுகிறது.

லெனின் லெனினாக, மேதையாகப் பிறந்திடவில்லை. ஸ்டாலின், மாவோ அல்லது சிப்தாஸ் கோஷ் ஆகிய எவரும் அப்படிப் பிறக்க வில்லை. எந்த மாபெரும் மனிதரும் அப்படிப் பிறக்கவில்லை. எக்காலத்திலும் ஒருவர் மேதையாகப் பிறந்திட முடியாது. மேதமை என்பது கூட ஒரு செயல் முறைப்போக்கின் உற்பத்திப் பொருளேயாகும். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தோழர் சுபோத் பேனர்ஜி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகையில், இந்த அம்சத்தை விரிவாக விளக்கியுள்ளார்.

எவரொருவரும் மேதையாகவோ அல்லது திறமையுடையவராகவோ பிறப்பதில்லை. ஒருவர் எந்த அளவிற்கு அவரது திறமை, திறன் அதாவது தேர்ச்சியை அடையமுடியும் என்பது ஒருவர் எவ்வளவு சிறப்பாக சரியான புரட்சிகர அதாவது முற்போக்கான சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தழுவிய போராட்டத்தை நடத்துகிறார் என்பதைப் பொருத்துத் தான் இருக்கிறது. இதில் அவரது ஆசான்கள் தவறிய போது, உரிய முறையில் போராட்டம் நடத்துவதில் மற்றும் புரட்சியை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டார். உலகில் எல்லோருக்கும் இயலாத ஒன்றாக இருந்தது அவரால் அடைந்திட முடிந்தது. அவர் சோசலிசப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றார்.

இத்தகைய கடமையானது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை, உண்மையில் மிகவும் கடுமையாக இருந்தது. மார்க்சிய நூல்களை வெறுமனே படிப்பது ஒருபோதும் போதாது. அதனால்தான் மார்க்சிசம் ஒரு ஆக்கபூர்வ அறிவியல் எனக் கூறப்படுகிறது. அறிஞர்களும்கூட பல நூல்களைப் படித்திருக்கின்றனர். ஆனால், ஒருவர் படித்தவற்றை மனப்பாடம் செய்வதால் மட்டுமே அத்தகைய ஆக்கத்தைப் பெறமுடியாது.

மார்க்சிசக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நீங்கள் ஆய்வு செய்கின்றீர்களா? முரண்பாடுகளை உரிய முறையில் கணக்கில் கொள்கின்றீர்களா? சமுதாயத்திலிருக்கும் நோயை நீங்கள் ஒரு மருத்து வரைப்போல் கண்டறிகின்றீர்களா? வர்க்க முரண் பாடுகளை உங்களால் அடையாளம் காண முடிகின்றதா?

பூர்ஷ்வாக்கள் எவ்வாறு அதன் சித்தாந்தம் மற்றும் கலாச்சாரத்தின் மூலம் தாக்குதல் தொடுக்கின்றனர்? இத்தகையத் தாக்குதல்களை முறியடித்திட பாட்டாளி வர்க்கம் எவ்வாறு போராட்டம் நடத்திட வேண்டும்?

ஒரு புதிய சூழ்நிலையில் மார்க்சிச அறிவியலை எவ்வாறு ஆக்கபூர்வமாகப் பிரயோகித்திட வேண்டும்? பருப்பொருளின் உள்ளிருக்கும் பல்வேறு முரண்பாடுகளின் தன்மைகள் யாவை? இத்தகைய முரண்பாடுகள் ஒரு நாட்டில் எவ்வாறு காணப்படுகின்றன.

கட்சியிலிருக்கும் தோழர்களின் உணர்வுமட்டத் தரம் என்பது எது? முரண்பாடுகள் தோழர்களின் சிந்தனைக் களத்தில் எவ்வாறு வேலை செய்கின்றது? பூர்ஷ்வா மற்றும் பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டுக்குமிடையேயான முரண்பாட்டில் தோழர்கள் எவ்வாறு ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர்? ஒரு தோழருக்கு எவ்வாறு உதவி செய்வது? ஒவ்வொரு கணத்திலும் முரண்பாடுகள் எவ்வாறு தோன்றுகின்றன? உள் மற்றும் வெளிமுரண்பாடுகள் என்பன யாவை? அவற்றுள் பிரதான முரண்பாடு என்பது எது? அந்த முரண்பாட்டின் பிரதான அம்சம் என்பது எது? காலப்போக்கில் இத்தகைய முரண் பாடுகள் எவ்வாறு மாறிக்கொண்டிருக்கின்றன?

மார்க்சிசத்தின் ஆக்கபூர்வ உயிரோட்டமான பிரயோகத்திற்கு இத்தகைய அனைத்து அம்சங்களையும் சரியாகக் கண்டுகொண்டு அவற்றைப் புரிந்துகொள்வது முன்தேவையாக இருக்கின்றது. எனவே மார்க்சியப் புரிதலானது உயிரோட்டமானதாக இருக்க வேண்டும். அதற்கு மார்க்சிசத்தை வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும்.

ஒருவர் எந்த அளவிற்கு மார்க்சிசத்தைப் புரிந்துகொண்டிருக்கின்றாரோ அந்த அளவிற்கு வாழ்க்கையில் அதனைப் பிரயோகிக்க வேண்டும். எந்த அளவிற்கு அதனை ஒருவர் வாழ்க்கையில் பிரயோகிக்கின்றாரோ அந்த அளவிற்கு அவர் உயர்ந்த கலாச்சாரத்தை அடைகின்றார். கலாச்சாரம் எந்த அளவிற்கு அடையப்பெற முடிகிறதோ அந்த அளவிற்கு மார்க்சிசப் புரிதல் என்பது உயர்ந்ததாக இருக்கும். இப்படித்தான் ஒருவர் முன்னேறிச்சென்றிட வேண்டும்.

எந்நேரத்தில் எக்கோரிக்கையை எழுப்ப வேண்டும், எந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும், மக்கள் எதிர்வினையாற்றும் வகையில் போராட்டத்திற்கு எந்த அறைகூவலை விடுத்திட வேண்டும் என்ற அனைத்தையும் கற்றுணர்வது என்பதன் பொருள் பல்வேறு முரண்பாடு களையும் அவற்றின் தன்மைகளையும் புரிந்து கொள்வதாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இதன் பொருள் ஒரு குறிப்பிட்ட நேரத்தின் பருண்மையான முரண்பாடுகளை பருண்மையாகப் புரிந்து கொள்வது என்பதாகும். மக்கள் உணவு, அமைதி, நிலம் மற்றும் விடுதலையை வேண்டி நின்றதை பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர் லெனின் எந்த வழியில் புரிந்து கொண்டாரோ அதே வழியில் தான் அவை புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆனால், பூர்ஷ்வாக்கள் மக்களுக்குத் துரோக மிழைத்துக் கொண்டிருந்தனர். மக்கள் வேண்டி நின்ற எதனையும் அவர்களால் வழங்கிடவோ தந்திடவோ முடியவில்லை. மென்ஷ்விக்குகளும் மக்களுக்குத் துரோக மிழைத்தனர்.

அந்நேரத்தில், கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் சோவியத்துக்கள் நிறுவப்பட்டு விட்டன. லெனினும் அவரது உற்ற தோழர்களும் இவற்றையெல்லாம் சோவியத்துக்களிடம் விவரமாகக் கூறிடவேண்டியிருந்தது. இச்செயல் முறைப் போக்கில் சோவியத்துக்களில் முன்பு சிறுபான்மையாக இருந்த போல்ஷ்விக்குகள் பெரும்பான்மையைப் பெற்றுவிட்டனர். பின்னர் லெனின் அவர்கள் 'அனைத்து அதிகாரமும் சோவியத்துக்களுக்கே' என்ற முழக்கத்தை முன்வைத்தார். பூர்ஷ்வாக்கள் தங்களின் ஒட்டு மொத்தப் படைக்கலன்களையும் கொண்டு தாக்குதல் தொடுத்தனர். ஆனால், லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் அறைகூவலின்படி, உழைக்கும் வர்க்கம் எழுச்சியுற்று பூர்ஷ்வாக்களைத் தோற்கடித்தது. நவம்பர் புரட்சியானது வெற்றியடைந்தது.

### சோசலிசத்தினுள்ளே அதற்கான ஆபத்து இருந்ததை லெனின் எச்சரித்தார்

1917ஆம் வருடம் நவம்பர் மாதம் 17ஆம் நாள் நவம்பர் புரட்சியானது நிறைவேறியது. அதற்குப் பின்னர் சில நாட்களிலேயே லெனின் அவர்கள் கடும் நோய்வாய்ப்பட்டு இறுதியாக 1924ஆம் வருடம் ஜனவரி மாதம் 21ஆம் நாள் 53 வயதிலேயே உயிர் நீத்தார்.

ஆனால் இக்குறுகிய காலத்திலேயே, யதார்த்த நிலைமையைக் கண்டுகொண்டு சோசலிசம் எதிர் கொள்ள வாய்ப்பிருக்கும் நிகழக்கூடிய ஆபத்து குறித்து எச்சரித்தார். பூர்ஷ்வாக்கள் தூக்கி யெறியப்பட்ட பின்னர் (அதாவது புரட்சிக்குப் பின்பு) அவர்களின் எதிர்ப்பானது பத்து மடங்கு அதிகரித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். பூர்ஷ்வாக்களின் பலம் (அது ஒரு நாட்டினதாக இருப்பினும்) ஏகாதிபத்திய–முதலாளித்துவத் துடனான அதன் சர்வதேசத் தொடர்புகளின் பலத்திலும் ஆயுளிலும் இருப்பதுமட்டுமல்லாது, சிறு உற்பத்தியின் பலத்திலும் மற்றும் நீடித்த பழக்கவழக்கத்தின் சக்தியினாலும்கூட (பூர்ஷ்வா மற்றும் நிலப்பிரபுத்துவத்தின்) இருந்து கொண்டிருக்கின்றது.

உலகில் அந்நேரம் சிறு உற்பத்தியானது மிகவும் பரந்து பட்டதாக இருந்துகொண்டு சிறு உற்பத்தி யானது முதலாளித்துவத்தையும் பூர்ஷ்வாக்களை யும் தொடர்ச்சியாக, தினமும், ஒவ்வொரு மணித் துளியிலும், தன்னிச்சையாக மற்றும் மிகப்பெரு மளவில் தோற்றுவித்தது. எனவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தூக்கியெறியப்பட்ட பூர்ஷ்வாக்களான, மிகவும் சக்திவாய்ந்த பகைவனுக்கெதிராக புதிய வர்க்கத்தினால் (பாட்டாளி வர்க்கம்) தொடுக்கப்பட வேண்டிய மிகவும் தீர்மானகரமான மற்றும் மிகவும் ஈவிரக்கமற்ற போராக இருந்தது என்றார். மற்றொரு இடத்தில், லட்சக்கணக்கான பல லட்சக்கணக்கானவர்களின் நெடுநாளைய பழக்க வழக்கத்தின் சக்தியென்பது ஒரு மிக பயங்கர சக்தியாகும் எனச்சுட்டிக்காட்டினார்.

லெனினுக்குப் பின்பு, அவரது மதிப்புமிக்க தொடர்ச்சியாளரான ஸ்டாலின், மாசேதுங் மற்றும் சிப்தாஸ் கோஷ் ஆகியோர் அவரது போதனை களினடிப்படையில், ஏன், எவ்வாறு சோசலிச மானது எதிர்ப்புரட்சியினால் ஆபத்திற்குள்ளாகும் என்பதையும் அத்தகைய ஆபத்திற்கான காரணங் களை முறையாக முறியடிக்காவிட்டால், எதிர்ப்புரட்சியானது வெற்றியடைந்து சோசலி சத்தைச் சிதைத்துவிடும் என்பதையும் பல்வேறு கோணங்களிலிருந்து காண்பித்தார்கள் ■

### சென்னையில் மழை வெள்ளத்தின் போது எஸ்யுசிஐ (சி) தன்னார்வலர்கள் செய்த பணிகள்








மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் நினைவு நூற்றாண்டையொட்டி மதுரையில் சுவரெழுத்துப் பிரச்சாரம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on : 25th to 31st
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை
PAATTALI CHINTANAI

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988
TN/CCN/429/2024-2026

# தமிழ்நாட்டில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மருத்துவ முகாம்



சிந்துப் பூந்துறை



கொக்கரகுளம்




அண்ணா நகர் மீனாட்சிபுரம் திருநெல்வேலி மாவட்டம்

கடந்த டிசம்பர் 18–20களில் பெய்த நூற்றாண்டு காணாத பெருமழையால் தென்காசி, நெல்லை, தூத்துக்குடி, கன்யாகுமரி மாவட்டங்கள் பேரிடரில் சிக்கின. குறிப்பாக தாமிரபரணி நதிக்கரை பகுதிகளும் ஏரிகள் உடைந்ததால் பல்வேறு கிராமப்பகுதிகளும் வெள்ளத்தில் மிதந்தன. உயிர்களையும் உடைமைகளையும் இழந்த மக்கள் தொடர்ந்துவரும் தொற்று நோய்களுக்கும் மழைக்கால உடல் உபாதைகளுக்கும் ஆளாயினர். மெடிகல் சர்வீஸ் சென்டர் மற்றும் பிரேக்துரூ சயின்ஸ் சொசைட்டி இணைந்து பல்வேறு மருத்துவ முகாம்களை பாதிக்கப்பட்ட தாழ்வான ஆற்றங்கரையோர குடிசைப்பகுதிகளில் நடத்தின. குறிப்பாக, நெல்லை நகரின் தாமிரபரணி கரையோர சிந்துப்பூந்துறை, கொக்கரகுளம், அண்ணாநகர் மீனாட்சிபுரம் ஆகிய பகுதிகளில் நான்கு நாட்கள் தொடர் மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்தன. முன்னதாக சென்னையில் வியாசர்பாடியில் நடந்த ஒருநாள் முகாமில் வீ ஃபார் ஆல் டிரஸ்ட், சரணாலயம்–வாணியம்பாடி ஆகிய அமைப்புகளும் மருந்துகளை அனுப்பி கலந்துகொண்டன.

நெல்லை நகரில் ஆற்றங்கரையோர வீடுகள் முதல் மாடி கூரைவரை மூழ்கியதால் மக்கள் அனைத்துப் பொருட்களையும் இழந்து கடும் சோகத்தில் இருந்தனர். ஆயினும், மருத்துவக் குழுவை வரவேற்று முகாம் அமைக்க அனைத்து உதவிகளையும் நல்கினர். பிருந்தாவன் கட்டுமான நிறுவன தொண்டர்கள் வாகன பிரச்சரம் செய்தனர். சிந்துப்பூந்துரையில் முதல் நாள் முகாம் இரண்டாம் நாளும் தொடர வேண்டியுதாயிற்று. அரசாங்கத்தின் கண்துடைப்பு முகாமிற்கும் இந்த முகாமிற்கும் வேறுபாட்டை உணர்ந்த மக்கள் தொடர்ந்து அணுகி பயன்பெற்றனர். பின்பு, கலெக்டர் அலுவலகத்தையே மூழ்கடித்த கொக்கரகுளம் பகுதியில் ஸ்டெல்லா மேரிஸ் பாலர் பள்ளியில் நடைபெற்ற முகாமிலும் முழு நாளும் மக்கள் பயன் பெற்றனர். அடுத்த நாள், அண்ணா நகரில் நடைபெற்ற முகாமிற்கு அப்பகுதி மக்கள் ஒத்துழைத்து பயன்பெற்றனர்.

முகாம்களில் மெடிகல் சர்வீஸ் சென்டர் அகில இந்திய செயற்குழு உறுப்பினர் டாக்டர் ஹரிபிரசாத், டாக்டர் இவானி கிருஷ்ணா, டாக்டர் விக்னேஷ், டாக்டர் இளந்திரை ஆகியோர் கலந்துகொண்டு சிகிச்சை அளித்தனர். செயின்ட் சேவியர் கல்லூரி மாணவர்கள் 20 பேர் தன்னார்வலர்களாக தொடர்ந்து வந்து உதவினர்.



வியாசர்பாடி, சென்னை

சென்னையில் முன்னதாக நடந்த முகாமில் டாக்டர் ஹரிபிரசாத், டாக்டர் அகிலன், டாக்டர் பத்மா, டாக்டர் சோஜா மற்றும் ஃபார்மசிஸ்ட் ஜெய் வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர் ■

# எண்ணூரில் எண்ணெய், வாயு கசிவை ஏற்படுத்திய தொழிற்சாலைகள் மீது தமிழக அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

சென்னை எண்ணூரில் அமைந்துள்ள பொதுத்துறை நிறுவனமான சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (CPCL) லில் ஏற்பட்ட எண்ணெய் கசிவாலும் தனியார் நிறுவனமான கோரமண்டல் இண்டர்நேஷனல் உரத் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவாலும் சுற்றுப்புறச் சூழல் முழுவதும் மாசடைந்து மக்கள் வாழ்வதற்கான சூழலை பாதித்து வருகின்றன. கடந்த டிசம்பர் 4 அன்று மிக்ஜம் புயலின் போது பலத்த மழை பெய்து கொண்டிருந்த நிலையில் அப்பகுதியின் தொழிற்சாலையில் இருந்து அதிக அளவில் எண்ணெய்க் கழிவை வெளியேற்றி கடல் பகுதியில் கலக்கவிட்டது. அதன் காரணமாக கடல் வாழ் இனங்கள் பாதிக்கப்பட்டதும், அதையொட்டி மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டன. நீரில் படிந்துள்ள எண்ணெயை அப்புறப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மீன்பிடிக்க செல்ல இயலாமல் போன மீனவர் குடும்பங்களுக்கும் சில நிவாரணங்கள் வழங்கிவிட்டு தனது கடமை முடிந்து விட்டது என்று அரசாங்கம் இருப்பதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் இது போன்ற எண்ணெய் கழிவுகளை வெளியேற்றக் கூடிய செயல்கள் இதற்கு முன்பாக நடந்துள்ளன. இதுபோன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க அரசாங்கம் கடுமையான விதிகளைச் தொழிற்சாலைகளுக்கு கொண்டு வர வேண்டும். இதைச் செயல்படுத்தாத தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த டிசம்பர் 26 ஆம் தேதி இரவு எண்ணூர் பகுதியில் கோரமண்டல் இன்டர்நேஷனல் உரத் தொழிற்சாலைக்கு கடல் வழியாக வரும் அம்மோனியா வாயு அதிக அளவில் கசிவு ஏற்பட்டு காற்று, நீர் மாசடைந்ததன் காரணமாக நூற்றுக்கணக்கான மக்கள் மூச்சுத் திணறல் மற்றும் கண், தொண்டை எரிச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். கசிவு ஏற்பட்டது இரவு நேரம் என்பதால் மக்கள் மேலும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களில் பலர் திருவொற்றியூர் தனியார் மருத்துவமனைகளிலும், அரசு ஸ்டான்லி மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

தொழிற்சாலைகள் எந்த அளவிற்கு பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டை கட்டுப்பாட்டுக்குள் வைக்கக்கூடிய நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துகின்றன என்பதும் இத்தொழிற்சாலைகள் இவற்றை கடைபிடிக்கின்றனவா என்று கண்காணிக்கக் கூடிய மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் அரசு நிர்வாகங்களும் என்ன செய்து கொண்டுள்ளன என்ற கேள்வி இயற்கையாகவே நமக்கு எழுகிறது. இதுபோன்ற விபத்துகள் நடக்கும் போது மட்டும் உடனே சில நாட்களுக்கு அத் தொழிற்சாலைகளை மூடுவது, சில நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற சில கண்துடைப்பு வேலைகளில் அரசாங்கம் ஈடுபடுவது என்பது மக்கள் மீது அரசாங்கம் கொண்டுள்ள பொறுப்பை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. மக்களும் இதை அறிந்தே உள்ளனர். ஆகையால் மக்கள் இந்நிறுவனங்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று கூறி போராடி வருகின்றனர். இச்சூழ்நிலையில் எண்ணெய் கழிவு மற்றும் அம்மோனியா வாயு கசிவுகளை உண்டாக்கிய தொழிற்சாலைகள் மீது கிரிமினல் வழக்குகள் போடப்பட்டு நஷ்டஈடு பெறப்படுவதற்கு பதிலாக, ஜனநாயக ரீதியில் போராடி வரும் மக்கள் மீது வழக்குகள் போடப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

ஆகவே, மக்களுக்கு உரிய மருத்துவ நிவாரணம் மற்றும் அனைத்து வித வாழ்வாதாரத் தேவைகளையும் அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டும். இதுபோன்ற தொழிற்சாலைகளை மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் இல்லாமல் உரிய இடத்தில் நடத்த அனுமதி வழங்குவது, மேலும், மாசு கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்நிறுவனங்கள் மிகச் சரியாக கடைபிடிக்கின்றனவா என்பதை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் அரசு நிர்வாகங்கள் கண் காணிப்பதை தமிழக அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தி அனைத்து தரப்பு மக்களும் குரல் எழுப்ப வேண்டுமென எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கேட்டுக் கொள்கிறது ■

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**